பெயரும் பதவியும்	நிகழ்ச்சித் திட்டம்	உள்நாட்டு/ வெளிநாட்டு	காலப்பகுதி
திரு.எஸ்.எல்.ஹெட்டியாராய்ச்சி பணிப்பாளர்	படுகடன் பகுப்பாய்வு; உபாயம், ஆபத்து மற்றும் பேண்தகு தன்மை - இந்தியா	வெளிநாடு	08.05.2009-22.05.2009
திரு.எச்.சீ.டி.எல்.சில்வா பிரதிப் பணிப்பாளர்	மலேசியாவின் ஆசியப் பிராந்திய படுகடன் முகாமைத்துவ மன்றம்	வெளிநாடு	03.11.2009 - 05.11.2009
திரு.எச்.சீ.டி.எல்.சில்வா பிரதிப் பணிப்பாளர்	அரச முகாமைத்துவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2009 முதுமானிப்பட்டம்	உள்நாடு	2009/2010
திரு.ஆர்.எம்.ஏ.ரத்னாயக்க பிரதிப் பணிப்பாளர்	பயன்வலு மிக்க தொலைத் தொடர்பு ஆற்றல்கள் - இல.மத்திய வங்கி	உள்நாடு	20.07.2009 - 21.07.2009
திரு.கே.ஏ.ஆனந்த பிரதிப் பணிப்பாளர்	பயன்வலு மிக்க தொலைத் தொடர்பு ஆற்றல்கள் - இல.மத்திய வங்கி	உள்நாடு	20.07.2009 - 21.07.2009
திருமதி.டபிள்யு.எஸ்.களுதரகே தரவுப் பதியுனர்	அட்வான்ஸ் ஒபீஸ் - மென்பொருள்	உள்நாடு	19.10.2009-23.10.2009
	அலுவலக வலையமைப்பினைப் பேணுதல்	உள்நாடு	மார்ச் 2009 தொடக்கம் செப்டெம்பர் 2009 வரை
திரு.எம்.என்.எம்.ஜுசி பொது முகாமைத்துவ உதவியாளர்	அட்வான்ஸ் ஒபீஸ் - மென்பொருள்	உள்நாடு	19.10.2009- 23.10.2009
திருமதி.ஜே.எம்.பீ.சன்ஜீவனி பொது முகாமைத்துவ உதவியாளர்	அட்வான்ஸ் ஒபீஸ் - மென்பொருள்	உள்நாடு	19.10.2009- 23.10.2009
திருமதி.பீ.கே.எஸ்.பெரேரா பொது முகாமைத்துவ உதவியாளர்	திறன் விருத்தி	உள்நாடு	செப்டெம்பர் 2009 தொடக்கம் டிசம்பர் 2009 வரை
திருமதி.கே.டி.என்.தரன்கனி பொது முகாமைத்துவ உதவியாளர்	திறன் விருத்தி	உள்நாடு	செப்டெம்பர் 2009 தொடக்கம் டிசம்பர் 2009 வரை
திரு.எல்.எச்.என்.தரங்கா பொது முகாமைத்துவ உதவியாளர்	வின்டோஸ் பிரயோகம்	உள்நாடு	29.05.2009-29
திரு.சமன் அத்துகொரள தரவுப் பதியுனர்	அலுவலக வலையமைப்பு பேணுதல்	உள்நாடு	மார்ச் 2009 தொடக்கம் செப்டெம்பர் 2009 வரை
திருமதி.திலேகா பிரியதிலக பொது முகாமைத்துவ உதவியாளர்	அலுவலக வரையமைப்பு பேணுதல்	உள்நாடு	மார்ச் 2009 தொடக்கம் செப்டெம்பர் 2009 வரை
திரு.டபிள்யு.ஏ.எஸ்.விக்கிரமாராய்ச்சி பொது முகாமைத்துவ உதவியாளர்	கணணி அறிமுகம்	உள்நாடு	10.08.2009- 14.08.2009

பெயரும் பதவியும்	நிகழ்ச்சித் திட்டம்	உள்நாட்டு/ வெளிநாட்டு	காலப்பகுதி
செல்வி.எம்.எம்.லியனஹே பொது முகாமைத்துவ உதவியாளர்	சிகாஸ்	உள்நாடு	24.08.2009-29.08.2009
திருமதி.வி.மல்லிகா பொது முகாமைத்துவ உதவியாளர்	இணையத்தளம், மின்னஞ்சல்	உள்நாடு	02.09.2009
திருமதி.எம்.எச்.சி.நிலந்தி பொது முகாமைத்துவ உதவியாளர்	இணையத்தளம், மின்னஞ்சல	உள்நாடு	02.09.2009
திருமதி.ஜே.பீ.ரணதுங்க பொது முகாமைத்துவ உதவியாளர்	இணையத்தளம், மின்னஞ்சல	உள்நாடு	02.09.2009
திரு.எல்.பீ.பி.கே.விஜேசிங்க பொது முகாமைத்துவ உதவியாளர்	அரசாங்கக் கொள்வனவு நடைமுறை அறிமுகம்	உள்நாடு	07.09.2009-08.09.2009
	கணணி வன்பொருள் பேணுகை	உள்நாடு	26.10.2009-30.10.2009
திருமதி.பத்மி வன்னியாராய்ச்சி பொது முகாமைத்துவ உதவியாளர்	வின்டோஸ் அடிப்படைப் பிரயோகம்	உள்நாடு	22.09.2009-26.09.1009
செல்வி.ஆர்.ஏ.பீ.குமாரி பொது முகாமைத்துவ உதவியாளர்	வின்டோஸ் அடிப்படைப் பிரயோகம்	உள்நாடு	22.09.2009-26.09.1009
திரு.ஏ.கே.பீ.றோகண பொது முகாமைத்துவ உதவியாளர்	சிகாஸ்	உள்நாடு	செப்டெம்பர் 2009 தொடக்கம் ஒக்டோபர் 2009 வரை
	கணணி வன்பொருள் பேணுகை	உள்நாடு	26.10.2009-30.10.2009
திருமதி.ஈ.சி.எஸ்.விஜேரத்ன பொது முகாமைத்துவ உதவியாளர்	கணணி வன்பொருள் பேணுகை	உள்நாடு	செப்டெம்பர் 2009 தொடக்கம் ஒக்டோபர் 2009 வரை
திருமதி.டபிள்யு.என்.ஐயதிலக தரவுப் பதியுனர்	கணணி வன்பொருள் பேணுகை	உள்நாடு	செப்டெம்பர் 2009 தொடக்கம் ஒக்டோபர் 2009 வரை
திரு.தர்ஷன அமரசிறி பொது முகாமைத்துவ உதவியாளர்	சர்வதேச கணணி பாவனை அனுமதிப்பத்திரம்	உள்நாடு	ஒக்டோபர் 2009 தொடக்கம் நவம்பர் 2009 வரை
திரு.எல்.எஸ்.டி.ஐயசேகர பொது முகாமைத்துவ உதவியாளர்	சர்வதேச கணணி பாவனை அனுமதிப்பத்திரம்	உள்நாடு	ஒக்டோபர் 2009 தொடக்கம் நவம்பர் 2009 வரை
திருமதி.வை.ஏ.எஸ்.சந்திரிகா பொது முகாமைத்துவ உதவியாளர்	சர்வதேச கணணி பாவனை அனுமதிப்பத்திரம்	உள்நாடு	ஒக்டோபர் 2009 தொடக்கம் நவம்பர் 2009 வரை
	சம்பளக் கொடுப்பனவு முகாமைத்துவம்	உள்நாடு	07.12.2009-12.12.2009
திருமதி.ஈ.டி.ஆர்.சில்வா பொது முகாமைத்துவ உதவியாளர்	சர்வதேச கணணி பாவனை அனுமதிப்பத்திரம்	உள்நாடு	ஒக்டோபர் 2009 தொடக்கம் நவம்பர் 2009 வரை
திரு.எம்.ஐயதிலக தரவுப் பதியுனர்	கணணி வன்பொருள் பேணுகை	உள்நாடு	26.10.2009-30.10.2009
திரு.எம்.ஜீ.டபிள்யு.ரணவீர பொது முகாமைத்துவ உதவியாளர்	கணணி வன்பொருள் பேணுகை	உள்நாடு	26.10.2009-30.10.2009
திரு.எச்.பீ.கே.விக்கிரமாராய்ச்சி பொது முகாமைத்துவ உதவியாளர்	சிகாஸ்	உள்நாடு	26.10.2009-31.10.2009
திரு.ஜீ.ஆர்.ஏ.பண்டார பொது முகாமைத்துவ உதவியாளர்	எம்.எஸ் வேர்ட் மென்பொருள்	உள்நாடு	26.10.2009-29.10.2009
திருமதி.சி.எம்.ஆராய்ச்சிஹே பொது முகாமைத்துவ உதவியாளர்	கட்டுநிதிக் கணக்கீடு	உள்நாடு	05.11.2009
திருமதி.எச்.எல்.சாந்தி பொது முகாமைத்துவ உதவியாளர்	கட்டுநிதிக் கணக்கீடு	உள்நாடு	05.11.2009
திருமதி.ஏ.எம்.பீ.எச்.அபேசிங்க பொது முகாமைத்துவ உதவியாளர்	கட்டுநிதிக் கணக்கீடு	உள்நாடு	05.11.2009
திருமதி.ஆர்.எஸ்.எச்.பீரிஸ் பொது முகாமைத்துவ உதவியாளர்	கட்டுநிதிக் கணக்கீடு	உள்நாடு	05.11.2009
திருமதி.சி.எம்.பீ.அர்சகுலரத்ன பொது முகாமைத்துவ உதவியாளர்	எக்சல் மென்பொருள்	உள்நாடு	16.11.2009-19.11.2009
திருமதி.பீ.ஆர்.டீ.பிரியாங்கனி பொது முகாமைத்துவ உதவியாளர்	திறன் விருத்தி ஆங்கில மொழி	உள்நாடு	2009

பெயரும் பதவியும்	நிகழ்ச்சித் திட்டம்	உள்நாட்டு/ வெளிநாட்டு	காலப்பகுதி
திருமதி.பி.ஆர்.வி.பெரேரா பொது முகாமைத்துவ உதவியாளர்	திறன் விருத்தி, ஆங்கில மொழி	உள்நாடு	2009
திருமதி.எச்.டி.எம்.சில்வா பொது முகாமைத்துவ உதவியாளர்	வின்டோஸ் அடிப்படைப் பிரயோகம்	உள்நாடு	23.11.2009-27.11.2009
செல்வி.றோஸ் பொது முகாமைத்துவ உதவியாளர்	தனிப்பட்ட கோவைகள் பேணுகை	உள்நாடு	26.11.2009-27.11.2009
செல்வி.ரெபேக்கா பெர்னான்டோ பொது முகாமைத்துவ உதவியாளா	சம்பளக் கொடுப்பனவு முகாமைத்துவம்	உள்நாடு	07.12.2009-12.12.2009
திருமதி.ஜே.டி.எஸ்.டி.ஜே. பெர்னான்டோ பொது முகாமைத்துவ உதவியாளா	சம்பளக் கொடுப்பனவு முகாமைத்துவம்	உள்நாடு	07.12.2009-12.12.2009
செல்வி.எச்.ஜீ.பீ.றோஷினி கணக்கு பகுப்பாய்வாளர்	சர்வதேச கணணிப் பாவனை அனுமதிப்பத்திரம்	உள்நாடு	பெப்ரவரி 2009 தொடக்கம் 2009 மார்ச் வரை
திருமதி.கே.ஜீ.எம்.தரங்கனி கணக்கு பகுப்பாய்வாளர்	சர்வதேச கணணிப் பாவனை அனுமதிப்பத்திரம்	உள்நாடு	பெப்ரவரி 2009 தொடக்கம் 2009 மார்ச் வரை

மேலும் குழு உயர்வினைக் கட்டியெழுப்புவதற்கும் ஊழியர்களின் மனோபாவத்தினை சாதகமான வகையில் மாற்றும் நோக்கத்துடனும், 2009 செப்டெம்பர் 4 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை பதுளை பசறையில் அமைந்துள்ள ஊவா மாகாண சபை முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவகத்தில் சமூக நலன்புரி சங்கத்தின் ஒத்துழைப்புடன் மூன்று நாள் வெளிக்கள பயிற்சிப்பட்டறையொன்றினை திணைக்களம் நடாத்தியது. நூற்றிபத்து மொத்த ஊழியர்களில் எழுபத்து எட்டு ஊழியர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் வெற்றிகரமாக கலந்து கொண்டனர்.

6. நிதிச் செயலாற்றுகை

அட்டவணை 6.1 நிதிச் செயலாற்றுகை - 2009

ரூ. '000

விடயம்	வகுதி / நோக்கம் / விடயம்/ வகை	2008		2009		அதிகரிப்பு / வீழ்ச்சி 2008 செலவினத்திற்கு மேல்	அதிகரிப்பு / வீழ்ச்சி % 2008 செலவினத்தின் அடிப்படையில்
		மதிப்பீடு	மெய்	மதிப்பீடு	மெய்		
	மீண்டெழும் செலவினம்	860,172	856,154	2,434,644	1,710,146	853,992	99.75
	ஆளுக்குரிய வேதனாதிகள்	**33,793**	**30,622**	**33,000**	**32,089**	**1,467**	**4.79**
1001	சம்பளங்களும் கூலிகளும்	28,900	25,819	26,550	25,644	(175)	(0.68)
1002	மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு	690	667	600	599	(68)	(10.19)
1003	பிற கொடுப்பனவுகள்	4,203	4,136	5,850	5,846	1,710	-
	பிரயாணச் செலவினம்	**669**	**654**	**832**	**826**	**172**	**26.30**
1101	உள்நாட்டு	55	53	30	25	(28)	(52.83)
1102	வெளிநாட்டு	614	601	802	801	200	33.28
	வழங்கல்கள்	**1,951**	**1,946**	**3,128**	**3,100**	**1,154**	**59.30**
1201	காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும்	911	908	1,300	1,274	366	40.31
1202	எரிபொருள்	1,011	1,010	1,793	1,792	782	77.43
1203	உணவும் சீருடையும்	29	28	35	34	6	21.43
	பராமரிப்புச் செலவினம்	**654**	**593**	**1,025**	**996**	**403**	**67.96**
1301	வாகனங்கள்	456	397	700	682	285	71.79
1302	இயந்திரத் தொகுதி உபகரணம்	196	196	325	314	118	60.20
1303	கட்டிடமும் கட்டமைப்பும்	2	-	-	-	-	-
	சேவைகள்	**1,282**	**1,253**	**1,415**	**1,413**	**160**	**12.77**
1401	போக்குவரத்து	40	36	40	39	3	8.33
1402	தபால் மற்றும் தொலைத் தொடர்பு	1,230	1,209	1,375	1,374	165	13.65
1405	பிற	12	8	-	-	(8)	(100.00)
	மாற்றல்கள்	**821,823**	**821,086**	**2,395,245**	**1,671,722**	**850,636**	**103.60**
1503-01	லொத்தர் அபிவிருத்தி உதவு தொகைகள் மீளளிப்பு	307,500	307,487	425,724	424,386	116,899	38.02
1504-01	உள்நாட்டு ஆடை தொழிற்சாலைகளுக்கான மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டம்	33,739	33,017	31,974	31,974	(1,043)	(3.16)
1504-02	வதிவுள்ள / வதிவற்ற வெளிநாட்டுக் கணக்குகளுக்கு ஊக்குவிப்புப் பொதி	-	-	1,500,000	779,480	779,480	100.00
1505-01	அரசாங்க ஊழியர் காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பு	480,000	480,000	437,000	435,380	(44,620)	(9.30)
1506	அரசாங்க அலுவலர் ஆதனக் கடன் வட்டி	583	582	547	502	(80)	(13.75)
1508	பிற	1	-	-	-	-	-

	மூலதனச் செலவினம்	1,843,065	871,216	867,534	417,373	(453,843)	(52.09)
	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்	**7,730**	**6,095**	**2,775**	**2,744**	**(3,351)**	**(54.98)**
2001	கட்டிடப் புனரமைப்பும் மேம்பாடும்	75	74	140	139	65	87.84
2002-01	திறைசேரி ஒற்றைக் கணக்கு முறைமையினைச் செயற்படுத்தல்	7,050	5,937	2,550	2,525	(3,412)	(57.47)
2002-02	பிற	465	-	-	-	-	-
2003	வாகனங்கள்	140	84	85	80	(4)	(4.76)
	மூலதனச் சொத்துக்களை எடுத்தல்	**1,280**	**1,253**	**1,610**	**1,581**	**328**	**26.18**
2102	தளபாட மற்றும் அலுவலக உபகரணம்	140	114	1,610	1,581	1,467	1,286.84
2103	பொறித்தொகுதி இயந்திர உபகரணம்	1,140	1,139	-	-	(1,139)	(100.00)
	நிதிச் சொத்துக்களை எடுத்தல்	**1,703,228**	**733,206**	**861,881**	**411,880**	**(321,326)**	**(43.82)**
2302-01	உள்நாட்டு ஆடைத் தொழிற்கம்பனிகள் மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டம்	247,128	247,128	411,881	411,880	164,752	66.67
2302-02	மிட்சுய் மற்றும் டாய்சேய் கம்பனிக் கொடுப்பனவு	456,100	456,078	450,000	-	(456,078)	(100.00)
2302-03	லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி	1,000,000	30,000	-	-	(30,000)	(100.00)
	திறன் விருத்தி	**580**	**416**	**1,268**	**1,168**	**752**	**180.77**
2401	பயிற்சி மற்றும் திறன் விருத்தி	580	416	1,268	1,168	752	180.77
	பிற மூலதனச் செலவினம்	**130,247**	**130,246**	**-**	**-**	**(130,246)**	**(100.00)**
2502	பிற முதலீடு	130,247	130,246	-	-	(130,246)	(100.00)

7. பௌதீகச் செயலாற்றுகை

7.1 காசு முகாமைத்துவம்

7.1.1 குறித்த ஆண்டின் போது காசு வரையறை மற்றும் காசு விடுவிப்புகள் தொடர்பில் துறை ரீதியான வகுதிகள்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பிரதான பொறுப்புக்களில் ஒன்று, நேர கால அடிப்படையிலும் முன்னுரிமை அடிப்படையிலும் செலவின முகவராண்மைகளுக்கு (திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் பிற நிறுவனங்கள்) காசினை விடுவிப்பதாகும். திணைக்களத்தின் அனுபவத்தின்படி, காசுக்கான கேள்வியானது திரவத்தன்மையின் கிடைப்பனவினைவிட எப்பொழுதும் பொதுவாக மிகவும் அதிகமானதாக இருக்கும். எனவே, ஒவ்வொரு அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேவைகளை சரியாக மதிப்பீடு செய்வதுடன் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினை மிகவும் பயன் வலுரித்தாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானவற்றைச் செய்வது திணைக்களத்தின் பொறுப்பாகும். இப்பின்னணியில், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பின் வடிவமைப்பினை ஒத்த வகையில், அதன் அடிப்படையில் காசு விடுவிப்புகளை மேற்கொள்வதற்கான உறுதிப்படுத்தும் வகையில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் காசு முகாமைத்துவப் பிரிவு ஐந்து துறைகளை உள்ளடக்கியுள்ளது. அந்த ஐந்து துறைகளும் பின்வருமாறாகும்.

- உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை
- மனிதவள அபிவிருத்தித் துறை
- இயற்கை வளங்கள் முகாமைத்துவத் துறை
- பாதுகாப்புத் துறை, மற்றும்
- ஆளுகைத்துறை

ஒவ்வொரு துறையும், உதவிப் பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளர் ஒருவரினால் முகாமை செய்யப்படும் அவர் காசுத் தேவை மதிப்பீடு, நிதி விடுவிப்புகள் மீதான சிபாரிசுகளை வழங்குதல் மற்றும் தனது துறையின் கீழ் வரும் அந்தந்த நிறுவனங்களுடன் தொடர்பான காசுப் பயன்பாட்டினைக் கண்காணித்தல் என்பவற்றுக்கு முழுமையான பொறுப்புடையவராக இருப்பார்.

உள்நாட்டு நிதிகள்(11) மற்றும் வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதிகள் (17) என்பவற்றின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு செலவின முகவராண்மைகள் அவற்றினது செலவினங்களை ஈடு செய்வதில் அவற்றினது வேண்டுகோள்களின் அடிப்படையில் காசு விடுவிப்புச் செய்யும் நிலைமையில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் காணப்படுகின்றது. கடந்த வருடங்களின் போது காணப்பட்ட வருமானப் பற்றாக்குறை காரணமாக முழுவதும் முன்னுரிமை அடிப்படையிலேயே விடுவிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், மீண்டெழும் செலவினத்திற்கான காசு விடுவிப்புகளில் துறை ரீதியான மீதியினை பேணுவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டன.

இவ்வாண்டின் போது செலவினத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட காசு வரையறைக்கு எதிராக செலவின முகவராண்மைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட காசு வெளிப்பாய்ச்சல் வரைபு 7.1 (அ), 7.1 (ஆ) மற்றும் 7.1 (இ) என்பவற்றில் காட்டப்பட்டுள்ளது.

வரைபு 7.1 (அ) வருடாந்த காசு வரையறையும் காசு விடுவிப்புகளும் - 2009



	IDS	HRD	NRM	DEF	GOV
வரையறை	108,780	123,697	94,527	265,388	256,011
வெளிப்பாய்ச்சல்	63,446	92,961	65,334	231,395	224,490
%	58%	75%	69%	87%	88%

விளக்கம்:

IDS = உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை HRD= மனிதவள அபிவிருத்தி

NRM = இயற்கை வளங்கள் முகாமைத்துவம் DEF= பாதுகாப்பு GOV= ஆளுகை

வரைபு 7.1 (ஆ) மீண்டெழும் செலவினத்திற்கான காசு வெளிப்பாய்ச்சல் - 2009



வரைபு 7.1 (இ) மூலதனச் செலவினத்திற்கான காசு வெளிப்பாய்ச்சல் -2009



வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு எதிராக உண்மையான வருமானத்தில் பற்றாக்குறை காரணமாக திறைசேரியினால் எதிர்நோக்கப்பட்ட காசுப் பாய்ச்சலில் இடையூறுகள் ஏற்பட்டதனால் காசு வரையறை மற்றும் உண்மையான காசு விடுவிப்புகள் என்பவற்றுக்கிடையில் இடைவெளி காணப்பட்டது. எவ்வாறிருப்பினும், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளுக்கு பகுதி அடிப்படையில் காசு விடுவிப்புச் செய்ததன் மூலம் குறிப்பாக ஒவ்வொரு துறையினையும் பேணுவதை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட 7.1 (அ) வரைபில் காட்டப்பட்டுள்ளவாறு, மொத்த கட்டு நிதி வரையறைகளுக்கு எதிராக மொத்த காசு விடுவிப்பு நியாயமான வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியின் போது நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தில் தற்பொழுது இடம்பெற்று வரும் மனிதாபிமான செயற்பாடுகள் காரணமாக திறைசேரி பாதுகாப்புத் துறைக்கும் ஆளுகைத் துறைக்கும் ஏனைய பிற துறைகளினை விட கூடிய முன்னுரிமை வழங்கியது. காசு விடுவிப்புகள் பற்றிய வகுப்பாக்க விபரம் கீழ்வரும் அட்டவணை 7.1 (அ) இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 7.1 (அ) மீண்டெழும் மற்றும் மூலதனம் அடிப்படையில் துறை ரீதியான கட்டுநிதி விடுவிப்புகள் வகுப்பாக்கங்கள்

ரூ.மில்லியன்

துறை	மீண்டெழும்			மூலதனம்		
	காசு வரையறை	மொத்த காசு விடுவிப்புகள்	%	காசு வரையறை	மொத்த காசு விடுவிப்புகள்	%
IDS	30,380.37	24,712.79	82	76,920.24	38,256.47	49
HRD	82,884.63	80,999.27	98	38,156.16	10,697.85	29
NRM	58,384.39	49,787.57	85	34,347.94	15,098.42	44
DEF	198,825.60	188,855.60	95	60,692.80	38,473.00	62
GOV	213,326.14	193,566.07	92	41,142.67	30,009.78	73
மொத்தம்	**583,801.12**	**537,921.30**	**92**	**251,259.80**	**132,535.52**	**53**

IDS=உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை; HRD=மனிதவள அபிவிருத்தித் துறை; NRM=இயற்கை வளங்கள் முகாமைத்துவம்; DEF=பாதுகாப்பு; Gov=ஆளுகை

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மீண்டெழும் செலவினங்களுக்கான செலவின முகவராண்மைகளின் காசுத் தேவைப்பாடு பெரும்பாலும் அனைத்தும் விடுவிக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு வகையில் கூறுவதாயின், வருடாந்த வரவு செலவுத் திட்ட அடிப்படையில் மொத்தக் காசு வரையறையில் ஏறக்குறைய 92% ஆனவை குறித்த ஆண்டிற்காகத் தீர்மானிக்கப்பட்டது. மீண்டெழும் செலவினத்தினைப் பொறுத்த வரையில், காசு விடுவிப்பானது நியாயமான அடிப்படையிலும் ஒப்புரவு முறையிலும் குறிப்பிடத்தக்க வீச்சான 10% ஆகக் காணப்பட்டது. (ஆகக் கூடியது 92%, குறைந்தது 82%) எவ்வாறாயினும், மூலதனச் செலவினங்களைப் பொறுத்தவரையில் இவ்வாண்டின் போது வருமானப் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக காசு வரையறையின் ஏறக்குறைய 53% க்கு விடுவிப்பு மட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன், சதவீதமொன்று என்ற வகையில் மூலதனச் செலவினத்திற்கு தொடர்புடைய மொத்த விடுவிப்புகளில் இது குறைவானதாக இருந்தது. அனைத்து மாவட்டங்களுக்குமிடையில் மூலதனச்

செலவினத்தின் நியாயமான பகிர்வொன்றினைக் குறிப்பிடும் காசு வரையறையின் 73% விடுவிப்பினால் ஆளுகைத் துறை மீது உயர்ந்த விடுவப்புக்களை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மேற்கொண்டது. மூலதனச் செலவினத்தில் அடுத்த அதிகூடிய விடுவிப்புகளான 62% ஆனது, வருடத்தின் நடுப்பகுதி வரை நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்பட்ட பாதுகாப்புச் சூழ்நிலையினை கருத்திற் கொண்டு கட்டாயமாகச் செய்ய வேண்டிய துறையான பாதுகாப்புத் துறைக்குச் செய்யப்பட்டது. நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்பட்ட பாதுகாப்பு நிலைமை மற்றும் உலகப் பொருளாதார நெருக்கடி இரண்டின் காரணமாகவும் நாட்டில் காணப்பட்ட நெருக்கடிச் சூழ்நிலையில் மூலதனக் செலவினத்தில் 53% இனை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் திறைசேரி காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

7.1.2 காசு வரையறை மற்றும் உண்மையான காசு விடுவிப்புகளின் துறை ரீதியான உள்ளடக்க ஒப்பீடு

வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டதுடன், வளங்களை ஒதுக்கீடு செய்வதில் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. பொதுத் திறைசேரியின் வரவு செலவுத் திட்டத்தினை இயக்கும் பிரதான கரமாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் காணப்படுகின்றது என்ற வகையில், காசு விடுவிப்பின் போதும் அதனையொத்த முக்கியத்துவத்தையும் முன்னுரிமைகளையும் பேணி வந்துள்ளது. பின்வரும் 7.1 (ஈ) வரையானது மீண்டெழும் செலவினம், மூலதனச் செலவினம் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்குகள் என்பவற்றுக்கான காசு விடுவிப்பினை துறை ரீதியான வகுதிகளுடன் காட்டுகின்றது.

வரைபு 7.1 (ஈ) காசு விடுவிப்புகளின் துறை ரீதியான வகுதிகள்













7.1.3 வருடாந்த வருமான எதிர்வு கூறலும் காசு முகாமைத்துவத்தில் அதன் முக்கியத்துவமும்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த காசுப் பாய்ச்சலினைத் தயாரிக்கையில், தொடர்புடைய வருமானக் கணக்கீட்டு அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் காசுப் பாய்ச்சல் எதிர்வு கூறலுக்கு மாற்றப்பட்டது. இதற்கமைவாக, வருமான உட்பாய்ச்சலில் எதிர்கூறல் முதலாவது வகுப்பாக்கப்பட்டதுடன் பின்னர் இணைக்கப்பட்டது. பின்வரும் 7.1 (ஆ) அட்டவணை மற்றும் வரைபு 7.1 (ஊ) வில் வருடாந்த காசு விடுவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினைப் பாதித்த வரி வருமானம் தொடர்பில் உட்பாய்ச்சலில் எவ்வாறான விலகல்கள் காணப்படுகின்றன என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 7.1 (ஆ) வருமான சேகரிப்பு

(மில்லியனில்)

	மதிப்பீடு	மெய்	%
வரி வருமானம்	767,962	596,762	78.0
வரியல்லாதவை	59,052	68,142	115.0
மானியம்	10,816	8,054	74.0
மொத்த வருமானம்	**837,830**	**672,958**	**80.0**

வரைபு 7.1 (உ) மதிப்பிடப்பட்ட மற்றும் மெய் வருமானம் 2009



மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை மற்றும் வரைபு என்பன, இவ்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 80% ஆக மாத்திரமே காணப்பட்டுள்ளது. இதனால் மூலதனச் செலவினத்தின் கட்டுநிதி விடுவிப்புகள் குறைந்து சென்றமையினை மறுசீரமைப்பதற்கு இந்த நிலைமையில் தாக்கமொன்று ஏற்பட்டது. ஆளுக்குரிய வேதானாதிகள், ஓய்வூதியங்கள் மற்றும் உதவு தொகை போன்ற மீண்டெழும் செலவினத்தினை பிற்போடல்,

விடுவிப்புகளை வரையறுத்தல் என்பன சாத்தியமற்றதாக இருந்தது. எனவே, வருமானத்தில் பற்றாக்குறையானது மூலதனச் செலவினங்களை ஈடு செய்வதில் காசு விடுவிப்புகள் மீது குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

7.1.4 காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் தொடர்புபடுத்தல் உபாயம்

கடன் பெறுகைகளின் மூலம் நிதியளிக்கப்படும் வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக மீண்டெழும் செலவினத்தினை ஈடு செய்வதற்கான வருமானத்துடன் தொடர்புபடுத்துவது திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் மிக முக்கிய சவால்களில் ஒன்றாகும். பின்வரும் 7.1 (ஊ) வரைபில், குறித்த ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட உண்மையான வருமானம், அதே போன்று காசு விடுவிப்புகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன மற்றும் மூலதனச் செலவினங்களை மேற்கொள்வதற்கான காசு விடுவிப்புகள் அத்துடன் வங்கி மேலதிகப் பற்று மீதான அதன் தாக்கம் என்பன காட்டப்பட்டுள்ளன.

வரைபு 7.1 (ஊ) உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சலினை தொடர்புபடுத்தல்



மேலே குறிப்பிடப்பட்ட வரைபில் காட்டப்பட்டவாறு, மீண்டெழும் செலவினத்தை ஈடு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட விடுவிப்புகள் குறித்த ஆண்டின் முதல் காலாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் சமாந்தரமாகச் செல்லும் வகையில் இடம் பெற்றமை மற்றும் மீண்டெழும் செலவினத்தினை விட வருமானத்தின் அளவு அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில், மேலதிகமான மிகை மூலதனச் செலவினத்தினை ஈடு செய்வதற்கான விடுவிப்புகளில் அதிகரிப்புக்கு காரணமாகியதுடன் வருடத்தின் பிற்பட்ட காலப் பகுதியின் போது மேலதிகப் பற்று மீதியினைக் குறைப்பதற்கும் காரணமாகியது.

7.1.5 காசு முகாமைத்துவத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட திறைசேரி ஒற்றைக் கணக்கு முறைமையினை பயன்வலுவாக்குதல்

2009 வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு காசு விடுவிப்புகள் 2009.12.30 இறுதி வரைக்கும் தொடர்ந்ததுடன், வருட இறுதியில் காசேடு மூடப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள பயன்படுத்தப்படாத காசு மீதிகள் அனைத்தினையும் திறைசேறி பெற்றுக்கொண்டது. கடந்த வருடங்கள் முடிவடைந்தது போன்றல்லாது எவ்வித செலவினமுமின்றி வங்கி வலையமைப்பினூடாக அவை வைப்புச் செய்யப்பட்டன. இந்த வகையில், 2009.12.31 அன்று உள்ளவாறு செலவின முகவராண்மைகளினால் வைத்துக் கொள்ளப்படும் செலவிடப்படாத காசு மீதிகள் அனைத்தையும் 2010 சனவரி மாதத்திற்குள் பிரதி திறைசேரிச் செயலாளரின் கணக்கிற்கு வைப்புச் செய்வதற்கு திறைசேரிக்கு முடியுமாக இருந்தது.

வங்கி கணக்குகளில் பயன்படுத்தப்படாதிருக்கும் காசினைக் குறைப்பதற்கு, தினசரி அடிப்படையில், உரிய கால அடிப்படையில் காசினை விடுவிப்பதற்கு திறைசேறி தனியான கணக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. நவீன மயப்படுத்தப்பட்ட திறைசேறி தனியான கணக்கு முறைமையின் கீழ் இது ஒரு குறிப்பிட்ட அடைவொன்றாகும்.

7.2 அரசாங்கக் கடன் பெறுகைகள்

2009 அரசிறை வருடத்திற்காக 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் மொத்தக் கடன் பெறுகை வரையறையான ரூபா 840 பில்லியன்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இறக்குமதிகளின் பெறுமதி மற்றும் அளவு வீழ்ச்சியடைந்ததன் காரணமாக, சுங்க வருமானம் திடீரென வீழ்ச்சியடைந்த அதேநேரம், வடக்கில் இடம்பெயர்ந்தவர்களின் புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்றத்திற்கான அவசர நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான அரசாங்கச் செலவினம் அதிகரிப்பட்டிருந்தது. எனவே, வருமானம் - செலவின இடைவெளியினை நிரப்பும் வகையில் 2009 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் (திருத்தச்) சட்டத்தின் மூலம் கடன் பெறல் வரையறை ரூபா 840 பில்லியனிலிருந்து ரூபா 1050 பில்லியனாக அதிகரிக்கப்பட்டது.

2009 ஆண்டின் போது கடன்பெறுகைகள் மற்றும் அரச படுகடன் மீள்கொடுப்பனவு என்பன கீழே வரைபு 7.2(அ) இல் காட்டப்பட்டுள்ளது.

வரைபு 7.2 (அ) கடன்பெறுகைகளும் பொதுப் படுகடன் மீள்கொடுப்பனவும்



மேலே காட்டப்பட்டுள்ள வரைபின் படி, கடந்த வருடத்தின் போது பெறப்பட்ட பெறுகைகள் படுகடன் மீள்கொடுப்பனவுடன் இணைந்த நேர்மறையாகக் காணப்படுவதுடன் கடன்பெறும் நிகழ்ச்சித்திட்டம் படுகடன் மீள் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்க படுகடன் மீதான கொடுப்பனவு எண்ணம் என்பவற்றுக்கிடையில் வெளிப்பாய்ச்சல் இணைப்பொன்றினை ஏற்படுத்தியுள்ளது.

7.3 அரசாங்கப் படுகடன்

2008 இன் இறுதியில் ரூபா 3,505 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த அரசாங்க படுகடன் தொகை 2009 இறுதியில் ரூபா 4,055 பில்லியனாகும். மொத்த படுகடனானது ரூபா 2,513 பில்லியன் உள்நாட்டுக் கடனையும் ரூபா 1,541 பில்லியன் வெளிநாட்டுக் கடனையும் கொண்டிருந்தது. இதனால், மொத்த படுகடனில் 38% இனை வெளிநாட்டு படுகடன் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

பின்வரும் அட்டவணை 7.3 (அ) 2009 டிசம்பரில் முடிவடைந்தவாறான அரசாங்கத்தின் படுகடன் இருப்பினைக் காட்டுகின்றது.

அட்டவணை 7.3 (அ) அரசாங்கப் படுகடன்

விடயம்	ரூபா. பில்லியனில் 2008 டிசம்பரில் முடிவடைந்தது.	ரூபா. பில்லியனில் 2009 டிசம்பரில் முடிவடைந்தது
மொத்த உள்நாட்டு படுகடன்	**2,073.8**	**2,513.28**
குறுகிய கால	**489.4**	**564.78**
திறைசேரி உண்டியல்கள்	408.9	481.40
இலங்கை மத்திய வங்கியிலிருந்து முற்பணங்கள்	76.3	73.88
பிற	4.2	9.50
நடுத்தர மற்றும் நீண்ட கால	**1,584.4**	**1,948.50**
ரூபாய் பிணைகள்	130.0	112.20
திறைசேரி முறிகள்	1,299.6	1,658.60
இலங்கை அபிவிருத்தி முறிகள்	145.6	157.50
பிற	9.2	20.20
மொத்த வெளிநாட்டு படுகடன்	**1,431.0**	**1,541.41**
நிறுவன மட்டத்தில்		
சலுகைக்கடன்கள்	**1,234.6**	**1,288.84**
இருதரப்பு	599.4	597.63
பல்தரப்பு	600.7	645.67
ஏற்றுமதிக் கடன்	31.4	42.07
வர்த்தக வங்கிகள்	3.1	3.47
சலுகையல்லாத கடன்கள்	**196.4**	**252.57**
இருதரப்பு	38.5	59.00
பல்தரப்பு	18.7	19.36
ஏற்றுமதிக் கடன்	29.1	55.14
வர்த்தக வங்கிகள்	110.1	119.07
மொத்த அரசாங்க படுகடன் நிலுவை	**3,504.8**	**4,054.69**

7.3.1 நடுத்தர மற்றும் நீண்ட கால உள்நாட்டுப் படுகடன்

2008 ஆம் ஆண்டில் ரூபா 1,584.4 பில்லியனிலிருந்து 2009 ஆம் ஆண்டில் 1,948.5 பில்லியனாக நடுத்தர மற்றும் நீண்டகால உள்நாட்டுப் படுகடன் அதிகரித்துள்ளது. இது முன்னைய வருடத்தினைவிட ஏறக்குறைய 24% அதிகரிப்பாகும்.

குறித்த வருடங்களில் முதிர்ச்சியடைந்த 2009.12.31 அன்றுள்ளவாறு உள்நாட்டுக் கடன் மீதிகளின் பெறுமதி கீழே அட்டவணை 7.3 (ஆ) வில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 7.3 (ஆ) நடுத்தர மற்றும் நீண்டகால உள்நாட்டுப் படுகடன் முதிர்ச்சிகள்

ரூபா மில்லியனில்

வருடம்	திறைசேரி முறிகள்	ரூபாய் கடன்கள்	இலங்கை அபிவிருத்தி முறிகள்	எப்சீபீயு கடன்கள்	மொத்தம்	மொத்தத்தில் %	திரட்டிய மொத்தத்தில் %
2010	339,787	24,583	60,527	24,484	449,381	22.8	22.8
2011	374,432	6,916	57,075	0	438,423	22.3	45.1
2012	317,247	3,575	4,680	0	325,502	16.6	61.7
2013	343,375	2,874	0	0	346,249	17.6	79.3
2014	92,139	2	45,435	0	137,576	7.0	86.3
2015	147,229	31,429	0	0	178,658	9.0	95.3
2016	4,397	0	0	0	4,397	0.3	95.5
2017	0	18,824	0	0	18,824	1.0	96.5
2018	38,338	0	0	0	38,338	2.0	98.5
2019	5,089	0	0	0	5,089	0.2	98.7
2020	0	0	0	0	0	0	98.7
2021	0	0	0	0	0	0	98.7
2022	0	0	0	0	0	0	98.7
2023	1,000	21,088	0	0	22,888	1.2	100.0
மொத்தம்	**1,663,033**	**109,291**	**167,717**	**24,484**	**1,965,325**	**100.0**	**100.0**

நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன்களில் மொத்த இருப்பில் 79% அடுத்த நான்கு ஆண்டுகளுள் முதிர்ச்சியடையும் என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும். இதில் 2010 ஆம் ஆண்டில் 23% கடன்கள் முதிர்ச்சி அடையும். படுகடன் சாதனங்கள் தொடர்பில் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய காரணிகளில் ஒன்று என்னவெனில், மொத்த நடுத்தர மற்றும் நீண்டகால உள்நாட்டு இருப்பில் 85% ஆனது திறைசேரி முறிகளில் வைக்கப்பட்டுள்ளதாகும்.

7.4 காசுப்பாய்ச்சல் நிலைமையினை தொடர்ந்து மீளாய்வு செய்தலும் கண்காணித்தலும்

2009 ஆண்டின்போது திறைசேரிச் செயலாளரின் தலைமையின் கீழ் எட்டு (08) காசுப்பாய்ச்சல் கூட்டங்களினை திறைசேறி செயற்பாடுகள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது. வருமான திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் திறைசேரி திணைக்கங்களின் அலுவலர்கள் இந்த கூட்டங்களில் கலந்துகொண்டதுடன் அங்கு இலக்குகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் திருத்தப்பட்டன. 2009 வரவு செலவுத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்காக அத்தகைய திருத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

7.5 வருமானக் கணக்கீடு

திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் 12 வரியில்லாத வருமான தலைப்புகளுக்கும் வரிவருமானத் தலைப்பொன்றுக்கும் வருமானக் கணக்கீட்டு அலுவலராக தொழிற்படுகின்றார். இந்த வகையில் குறித்த ஆண்டில் மொத்த வரியில்லாத வருமானத்திற்கெதிராக வரியில்லாத 12 தலைப்புகளிலிருந்தும் உயர் வருமானம் சேகரிக்கப்பட்டது.

2009 இல் ரூபா 67.7 பில்லியன் 12 வரியில்லாத வருமானத் தலைப்புகளின் கீழ் சேகரிக்கப்பட்டதுடன் இது மொத்த வரியில்லாத வருமானமான ரூபா 127.7 பில்லியனில் ஏறக்குறைய 53% இனை பிரதிநிதித்துவப்படுத்தியது.

அட்டவணை 7.5.1 வரியில்லாத வருமான சேகரிப்பு 2007 – 2009

ரூபா ஆயிரத்தில்

வருமான விபரம்	வருமான சேகரிப்பு				
	2007	2008		2009	
		மதிப்பீடு	உண்மை	மதிப்பீடு	உண்மை
அரசாங்க கட்டிட வாடகை	559,159	600,000	612,237	600,000	664,213
பிற வாடகைகள்	52,855	50,000	55,689	50,000	44,225
கடன் வட்டி	8,099,757	8,652,000	7,775,129	8,631,000	7,799,955
பிற வட்டி	1,142,650	1,050,000	1,529,726	1,050,000	1,243,284
திணைக்கள விற்பனை	77,596	100,000	57,314	60,000	63,484
நானாவிதம்	6,229,684	10,800,000	10,301,337	12,000,000	11,069,873
தண்டமும் தடுத்துவைப்பும்	1,417,997	1,500,000	2,087,809	1,500,000	2,002,752
பிற பெறுகைகள்	3,681,628	3,700,000	13,522,410	4,800,000	5,390,299
பிற நடைமுறை மாற்றல்கள்	5,440,227	1,450,000	602,513	1,000,000	1,541,544
மூலதனச் சொத்துக்களின் விற்பனை	545,527	599,000	118,703	400,000	77,904
உப கடன்களின் அறவீடு	11,676,975	13,494,000	13,525,905	13,600,000	11,978,195
வெளிநாட்டு மானியம்	17,372,510	20,000,000	22,131,291	19,000,000	25,922,244
மொத்தம்	**56,296,565**	**61,995,000**	**72,320,063**	**62,691,000**	**67,797,972**

மேற்குறிப்பிட்ட வருமானத் தவைப்புளின் கீழ் 2009 இல் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கு மேலதிகமான 8% ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009 ஆம் ஆண்டிற்கான உண்மையான வருமானம் 2008 இல் காணப்பட்ட உண்மையான வருமான சேகரிப்புடன் ஒப்பிடுகையில் 2009ஆம் வருடத்திற்கான "பிற பெறுகைகள்" என்பதன் கீழ் வகுப்பாக்கப்பட்ட வருமானத்தில் வீழ்ச்சி காரணமான 6% இனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

2010 ஜனவரி 04 ஆம் திகதிய 207/2009 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்று நிருபத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, மேற்குறிப்பிடப்பட்ட 13 வருமானத் தலைப்புகளின் வருமானக் கணக்குகள் 2009.03.31 அன்று கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

7.6 உப கடன் மூலதன மற்றும் வட்டி அறவீடு

மாதாந்தம் இற்றைப்படுத்தப்பட்ட உப கடன்கள் மீதான தகவல் முறைமையினை திணைக்களம் பராமரித்து தலைப்புகளில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உட கடன்களின் மூலதனம் மற்றும் வட்டி இரண்டினையும் அறவிடுவதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் பொறுப்புடையதாகும். மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு வருமானத்தலைப்புகளின் கீழ் வருமான மதிப்பீடு, சேகரிப்பு மற்றும் ஏற்றுக் கொள்ளல் என்பன அத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

2009 ஆண்டின் போது, ரூபா 40.66 பில்லியன் தொகையொன்று உப கடன்களாக விடுவிக்கப்பட்டதுடன் ரூபா 11.98 பில்லியன் கடன் மூலதனத்தில் அறவிடப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக, ரூபா 7.8 பில்லியன் வழங்கப்பட்ட உப கடன்கள் மீதான வட்டியாக சேகரிக்கப்பட்டது.

கடன் மீள் அறவட்டுச் செயன்முறைகளை கண்காணித்தல் மற்றும் உறுதிப்படுத்தல் காரணமாக, எதிர்பார்க்கப்பட்ட கடன் அறவீடுகள் மற்றும் குறித்த வருடத்திற்கான வட்டி நிலுவை என்பவற்றைஅடைந்துகொள்வதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் இயலுமாக இருந்தது. வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கிகள் உள்ளடங்கலாக 67 வித்தியாமான நிறுவனங்கிளனால் வழங்கப்பட்ட ரூபா 281பில்லியனாக 2009இன் இறுதியில் உப கடன்களின் மொத்த மீதி நிலுவைக் காணப்பட்டது.

7.7 பொதுப் படுகடன் சேவைகளும் கணக்கீடும்

7.7.1 வெளிநாட்டு உதவி மானியங்கள் - காசுமானியங்கள்

இவ்வாண்டின் போது, இலங்கை மத்திய வங்கியின் விஷேட நாணயக் கணக்குகளினூடாக சில கருத்திட்டங்களுக்காக ரூபா. 11.2 பில்லியன் தொகையான காசுமானியங்களை திறைசேரி பெற்றுக் கொண்டது.

7.7.2 உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வடிவில் பெறப்பட்ட மானியங்களை பதிவு செய்தலும் கணக்கீடு செய்தலும்

இவ்வாண்டின் போது, பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வடிவில் ரூபா 14.5 பில்லியன் மானியத்தை செலவின முகவராண்மைகள் பதிவாக்கியுள்ளன. இதற்கமைவாக, 1994.04.30 ஆம் திகதியில் 30/94 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிருபத்திற்கு அமைவாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் அவற்றின் பெறுமதியை கணக்கீடு செய்தது.

அட்டவனை 7.7.3 படுகடன் சேவை தகவல்கள்

	2008 (ரூபா மில்லியனில்)	2009 (ரூபா மில்லியனில்)
மீண்டெழும் செலவினம்	**212,274**	**308,253**
உள்நாட்டு படுகடன் மீது செலுத்தப்பட்ட வட்டி	185,069	276,769
வெளிநாட்டு படுகடன் மீது செலுத்தப்பட்ட வட்டி	26,827	26,369
பிற	378	5,115
மூலதனச் செலவினம்	**364,036**	**499,374**
கடன் மீள் கொடுப்பனவு – உள்நாடு	284,834	386,682
கடன் மீள் கொடுப்பனவு - வெளிநாடு	79,202	112,692

வட்டிக் கொடுப்பனவு மற்றும் கடன் மீள் கொடுப்பனவு என்பவற்றை 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2009இல் முறையே ரூபா 95,979 மில்லியன் மற்றும் ரூபா 135,338 மில்லியனாக அதிகரித்தது.

7.7.4 மீளளிக்கக் கூடிய செளிநாட்டு உதவியும் (மீவெ.உ) கட்டு நிதிக் கணக்குகளும்

(அ) இவ்வாண்டின் போது, மேற்குறித்த இரண்டு கட்டுநிதி முறைமைகளின் கீழ் மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி ரூபா 18,822 மில்லியன் மற்றும் வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதிகள் ரூபா 8,165 மில்லியன் என்பன விடுவிக்கப்பட்டது. மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி முறைமையின் கீழ், திறைசேரியினால் தொடர்புடைய கருத்திட்டங்களின் வங்கிக் கணக்குக்கு நேரடியான கட்டுநிதி விடுவிக்கப்பட்டதுடன் மற்றும் பிற கருத்திட்டங்களுக்கான

கட்டுநிதி விடுவிப்பானது தொடர்புடைய அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டின்போது கடன் வழங்குநர்களினால் மேற்கொள்ளப்பட்ட மீளளிப்பு நிலைமைகள் பின்வரும் 7.7.4.1 அட்டவனையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவனை 7.7.4.1 மீளளிப்பு நிலைமைகள்

	வருடத்தின் ஆரம்பத்தில் மீளளிப்பு நிலுவை (ரூபா மில்லியனில்)	*மீ.வெ.உ கீழ் விடுவிக்கப்பட்ட நிதி*	*குறித்த ஆண்டின் போது பெறப்பட்ட மீளளிப்பு*	*வருட இறுதியிலுள்ளவாறு மீளளிப்பு நிலுவை*
2008	3,718	19,328	19,444	3,602
2009	3,749	18,822	18,516	4,055

இவ்வாண்டின் போது, மீ.வெ.உ கீழ் ரூபா 16,278 மில்லியன் மற்றும் வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதியின் கீழ் ரூபா 7,470 மில்லியனை 37 கருத்திட்டங்களுக்காக நேரடி கட்டுநிதி விடுவிப்பு முறைமையினூடாக திறைசேரி விடுவித்துள்ளது. தொடர்புடைய அமைச்சுக்களினூடாக கருத்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட கட்டு நிதி மீ.வெ.உ கீழ் ரூபா 2544.0 மில்லியனாகவும் வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதியின் கீழ் ரூபா 695.0 மில்லியனாகவும் காணப்பட்டது.

(ஆ) கொடை வழங்கும் முகவராண்மைகளிடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்கான நிதிப் பாய்ச்சலுக்கு வசதியளிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியின் கட்டு நிதிக் கணக்குகளை திறைசேரி கண்காணித்து வருகின்றது. ஆண்டின் போது, திறைசேரி 15 புதிய கட்டு நிதிக் கணக்குகளைத் திறந்துள்ளதுடன் மொத்தமாக 132 கணக்குகளைப் பேணிவருகின்றது. குறித்த ஆண்டின் போது, கடன் வழங்கும் முகவராண்மைகள் இக் கணக்குகளுக்கு ரூபா 41,514 மில்லியனை பதிலீடு செய்துள்ளது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இது ரூபா 79 மில்லியனால் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு நிதியளிப்பு கருத்திட்டங்கள் கட்டு நிதிக் கணக்குகளிலிருந்து ரூபா 41,909 மில்லியனை மீளப்பெற்று செலவிடப்பட்டுள்ளதுடன் குறித்த ஆண்டின்போது மேலும் விரிவாக்கப்பட்டது. இவ்வாண்டின் போது கட்டு நிதிப்பயன்பாடு முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 476 மில்லியனால் குறைவடைந்துள்ளது.

7.8 உத்தரவாதங்கள் மற்றும் பிணைக் கடிதங்கள் மீதான நானாவித பொறுப்புக்கள்

7.8.1 உத்தரவாதங்கள்

2009.12.31 அன்றுள்ளவாறு வெளியிடப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் இருப்புத்தொகை ரூபா 176,893.39 மில்லியனாகும். 2008இன் இருப்புக்களுடன் ஒப்பிடுகையில் இது 38% ஆன அதிகரிப்பொன்றாகும். கடன்பெறும் நிறுவனங்கிளினால் வழங்கப்பட்ட வசதிகள் தீர்க்கப்பட்டதன் காரணமாக ரூபா 18,261.76 மில்லியன் பெறுமதியான ஏழு உத்தரவாதங்கள் இருப்பிலிருந்து நீக்கப்பட்டது. அதேவேளை குறித்த ஆண்டின் போது ரூபா 51,212 மில்லியன் பெறுமதியான நூற்று இருபத்தாறு புதிய உத்தரவாதங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட மொத்த உத்தரவாதங்களில் பிரதான பகுதியொன்று உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகளுக்காக மின்சக்தி எரிபொருள் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்துறையானது வெளியிடப்பட்ட உத்தரவாதங்களில் 88% இனைக் கொண்டுள்ளது.

வரைபு 7.8.1.1 உத்தரவாதங்களின் துறைரீதியான பகிர்வு – 2009



2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறைமுகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட 4.5% ஆகக்கூடிய வரையறைக்கு குறைந்த நிலையில் 2009.12.31 அன்றுள்ளவாறு உத்தரவாத நிலுவைகளின் மொத்த பெறுமதி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.55% இனை பிரதிநிதித்துவப்படுத்தியது. இலங்கை சனநாயக சோசலிகக் குடியரசு அரசாங்கத்தின் 2009 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களில் நானாவிதப் பொறுப்புக்களின் விபரம் வெளிக்காட்டப்பட்டுள்ளது. (குறிப்பு 29 (அ) மற்றும் (ஆ) இனைப் பார்க்கவும்)

7.8.2 பிணைக் கடிதங்கள்

2009.12.31 அன்றுள்ளவாறு ரூபா 15,584.37 மில்லியன் பெறுமதியான பிணைக்கடிதங்களினைத் திறப்பதற்கு வசதியளிப்பதற்காக திறைசேரியினால் பிணைக்கடிதங்கள் விநியோகிக்கப்பட்டன. 2008 ஆம் வருடத்தில் காணப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 38 சதவீதனால் ஆண்டின் இறுதி வரைக்கும் வெளியிடப்பட்ட பிணைக்கடிதங்களின் தொகை வீழ்ச்சியடைந்தது. இது குறிப்பாக, 2009 இன் இரண்டாவது அரையாண்டில் முப் படைகளினாலும் திறக்கப்பட்ட கடன் உத்தரவாதக் கடிதங்களின் வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும்.

7.9 வெளிநாட்டு உதவி முகாமைத்துவச் செயற்பாடுகளின் கீழ் கடன் கருத்திட்டங்களின் செயற்படுத்துகையும் கண்காணிப்பும்.

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் கீழ் வரும் வெளிநாட்டு உதவி முகாமைத்துவப் பிரிவு அனைத்து கடன்பெறும் கருத்திட்டங்கள் மீதான மதிப்பீடு, செலவினம், கணக்கீடு மற்றும் முன்னேற்ற மீளாய்வு மற்றும் அறிக்கையிடல் என்பவற்றுக்குப் பொறுப்பானதாகும். கடன்பெறும் கருத்திட்டங்களின் பிரதான நோக்கம், மோசமான பொருளாதார மற்றும் நிதிச் சூழ்நிலையில் தாபிக்கப்பட்ட வங்கித் தொழிற்துறையிலிருந்து கடன் பெறுவதனைத் தவிர்ந்து கொள்ளும் சிறிது மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் கடன் அடைவினை அதிகரிப்பதாகும். எனவே, அரசாங்கம் இத்துறைக்கு வசதியளிப்பதற்கு பல்வேறுபட்ட உதவு நிதியளிப்புத்திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது. இந்த மீள நிதியளிப்பு திட்டங்கள் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கடன்கள் மற்றும் மானியங்கள் அத்துடன் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட திரட்டு நிதியத்தினாலும் நிதியளிக்கப்பட்டது.

2009 ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட ஏற்பாடானது 2008 இல் ரூபா 21.0 மில்லியன் ஏற்பாடுகளுடன் ஒப்பீடுகையில் ரூபா 14.5 மில்லியனாகக் காணப்பட்டது. இரண்டு வருடங்களின் இந்த ஏற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் குறித்த காலப்பகுதியின் பின்னர் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் முடிவடைந்ததன் காரணமாக முன்னைய வருடத்தினை விட 2009இன் ஏற்பாடு 31% குறைவாகக் காணப்பட்டது. மொத்த ஏற்பாடு ரூபா 14.5 மில்லியனில் 2009 நிதியாண்டின் போது ரூபா 10.1 பில்லியனை செலவிடுவதற்கு திணைக்களத்தினால் முடியுமாக இருந்தது. இது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் கீழ் கடன்பெறும் கருத்திட்டங்கள் மீதான வரவுசெலவுத்திட்ட ஏற்பாட்டிலிருந்து 70% அடைவொன்றாகும். கடந்த வருடம் வரைக்கும் நாட்டின் வடக்கு மற்றும் நாடு எதிர்நோக்கிய உலகப் பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம் என்ற இரண்டும் நிலவிய நிதிச்சீரின்மை காணப்பட்ட காலப்பகுதியில் இது ஒரு குறிப்பிடத்தக்க அடைவொன்றாகும்.

பல்வேறு துறைகளின் கீழ் கடன்பெறும் கருத்திட்டங்களுக்கான ஏற்பாடுகள் மற்றும் அவற்றினது நிதி முன்னேற்றங்கள் என்பன கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளது.

வரைபு 7.9.1 வரவு செலவுத்திட்ட மற்றும் உண்மைசெலவினம் - 2009



மொத்த ஏற்பாடுகளில் ஏறக்குறைய 65% ஆனது சிறிய மற்றும் மிகச்சிறியளவிலான தொழில்முயற்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் மீதி 35% ஆன ஏற்பாடுகள் கிராமியத்துறைக்கு புதுப்பிக்கக்கூடிய சக்தி உருவாக்கத்திற்காகவும் (12%), சுனாமியினால் பாதிக்கப்பட்ட துறையின் அபிவிருத்திக்காக (5%) பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்திக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி முன்னேற்றத்தினை மீளாய்வு செய்யும் பொழுது, பல்வேறு காரணிகளின் காரணமாக புதுப்பிக்கக்கூடிய சக்தி தொடர்பான கருத்திட்டங்கள் ஏறக்குறைய 48% ஆன ஏற்பாட்டினை மாத்திரம்

அடைந்தது. அவற்றுள் சிறிய நீர் மின் உற்பத்திக் கருத்திட்டங்களுக்கு நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதில் பின் நின்றமை மற்றும் மிகக்குறைந்த விளைவினைத் தரக்கூடிய மதிப்பிடப்பட்ட எஞ்சிய நீர் மின் உற்பத்தி தொகுதிகளில் ஆபத்துநிலை, உத்தேசிக்கப்பட்ட காற்றாடி மின் ஆலைகளின் உயர் செலவினத்தில் ஏற்பட்ட உயர்ஆபத்து மற்றும் அத்தைனைய கருத்திட்டங்களில் அனுபவமின்மையினாலும் வங்கிகள் கடன் வழங்குவதற்கு பின்நின்றன. சுனாமி மீள் கட்டமைப்பு ஏற்பாட்டுக்கான நிதிமுன்னேற்றம் 76% இனையும் பெருந்தோட்டத்துறை கருத்திட்டங்களுக்கான நிதி முன்னேற்றம் ஏறக்குறைய 80% இனையும் கொண்டிருந்தது. 2009 ஆம் ஆண்டுக்கான திறைசேறி செயற்பாடுகள் திணைக்களத்தின் கீழ்மொத்த நிதிச் செயலாற்றுகை கடன் பெறல் கருத்திட்டங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மொத்த ஏற்பாடுகளில் ஏறக்குறைய 70% ஆகக் காணப்பட்டது.

7.10 விஷேடமாக ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகள்

7.10.1 நெல் விலை ஒழுங்குபடுத்தல் திட்டத்திற்கான சுழற்சி நிதி தொழிற்பாடு.

விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டவாறு நெல் கொள்வனவு செய்வதற்கு தேவையான வேலை மூலதனத்தை ஈடுசெய்வதற்கான நிதியின் மூலம் உருவாக்கப்பட்ட சுழற்றி நிதி தொழிற்பாட்டுக்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் பொறுப்பாகும்.

2009 ஆண்டின் போது, வர்த்தகம், சந்தைப்படுத்தல், அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை என்பவற்றின் சிபாரிசுக்கு அமைவாக திறைசேரி ரூபா 1060.00 மில்லியனை விடுவித்துள்ளது. 2009.12.31 அன்றுள்ளவாறு சுழற்சி நிதியத்தின் நிதி நிலைமையை அட்டவணை 7.10.1 காட்டுகின்றது.

அட்டவனை 7.10.1 2009.12.31 அன்றுள்ளவாறு சுழற்சி நிதியத்தின் ஐந்தொகை

சொத்துக்கள்:	
நடைமுறை சொத்துக்கள்	
நெல் சந்தைப்படுத்தல் சபை	310,000,000.00
வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சு	76,906,987.48
காசும் காசுக்குச் சமனானவையும்	
காசு மீதி	1,817,322,818.69
மொத்தம்	**2,204,229,806.17**
நிதியளிப்பு:	
ஆரம்ப மூலதனம்	1,999,025,150.00
பெறப்பட்ட வட்டி	204,952,656.17
பொறுப்புக்கள்	252,000.00
மாவட்டச் செயலாளர் - இரத்தினபுரி	
மொத்தம்	**2,204,229,806.17**

2009 இன் போது சுழற்சி நிதியிலிருந்து நெல் கொள்வனவிற்காக விடுவிக்கப்பட்ட நிதி மீள் அறவீடு மற்றும் பல்வேறுபட்ட பிறமூலங்களிகளின் விபரம் பின்வருமாறு:

அட்டவணை 7.10.2 நெல்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அறவீடு – 2009

நிறுவனம்	*பிற மூலங்கள் ரூபா.*	*சுழற்சி நிதி ரூபா.*
நெல் சந்தைப்படுத்தல் சபை	-	950,000,000.00
மாவட்டச் செயலாளர் - இரத்தினபுரி	275,000.00	
வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சு	29,641,071.11	
மொத்தம்	**29,916,071.11**	**950,000,000.00**

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், செயற்படுத்தல் முகவராண்மைகளின் நிதித் தேவைகளை நிவர்த்திசெய்வதில் சுழற்சி நிதியத்தின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் வகையில் தொடர்புடைய திறத்தவர்களிடமிருந்து அறவீடுகளின் முன்னேற்றங்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

7.10.2 ஆதனக் கடன் உத்தரவாத நிதியம்

2005 வரவு செலவுத் திட்ட முன்மொழிகளைச் செயற்படுத்துவதில், ஒவ்வொரு அரசாங்க ஊழியனும் பெறுமதியான ஆதனம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கும் நோக்கத்துடன் வங்கித் தொழில் முறைமையினூடாக அரசாங்க ஊழியர்களுக்கான புதிய ஆதனக் கடன் திட்டமொன்றினை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. ஆதனக் கடன் உத்தராவாத நிதியமானது, மரணமடைந்த அல்லது சேவையிலிருக்கும் பொழுது முழுமையாக அங்கவீனமுற்ற போது வங்கிகளுக்கான கடனை அடைப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. நிதியத்தின் பராமரிப்பு, முதலீடு, கடன் மீள் கொடுப்பனவுகள் உள்ளடங்கலான விடயங்கள் 2005.04.26 ஆம் திகதிய 122ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்று நிருபத்திற்கு அமைவாக இத்திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்றது.

7.10.2.1 நிதியத்தின் தொழிற்பாடு

மேற்குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வங்கிகளிலிருந்து கடன் பெற்றுள்ள மரணித்த அல்லது முழுமையாக அங்கவீனமுற்ற அரசாங்க ஊழியர்களின் நிலுவையிலுள்ள கடன் மீதிகளினை செலுத்தும் நோக்கத்துடன் திறைசேரி முறிகளில் ரூபா 916,231,000 இனை முதலீடு செய்ததன் மூலம் இந்த நிதி ஸ்தாபிக்கப்பட்டது. இந்நோக்கத்திற்காக நிதியத்தின் முதலீட்டு வருமானம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியம் ஆம்பத்தில் தவணைக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்து செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தபோதிலும், பின்னர் அது அதிக நிர்வாகப் பணிகள் மற்றும் அதிக செலவினத்தினை ஏற்படுத்துவதாக அறியப்பட்டது. அதனால், குறித்த வங்கி தொடர்பில் குறித்த திட்டத்தின் கீழ் ஊழியர் ஒருவர் செலுத்துவதற்கு நிலுவையாக உள்ள கடனை ஒரே தடவையில் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

7.10.2.2 நிதியத்தின் தற்போதைய நிலைமை

வங்கிகளினூடாகப் பெறப்பட்ட ஆதனக் கடன்களின் கொடுப்பனவு தொடர்பில் வெளியிடப்பட்ட 8/2005 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கு அமைவாக மரணித்த அல்லது முழுமையாக அங்கவீனமுற்ற அரசாங்க ஊழியர்களின் கடன் மீதிகளை, விண்ணப்பங்களையும் அது தொடர்பான ஆவணங்களையும் பரிசீலனை செய்த திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் செலுத்தியுள்ளது. 2009 ஆம் ஆண்டின் 56 அரசாங்க ஊழியர்கள் தொடர்பில் ரூபா. 42,368,565 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது.

2009 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுகைகளும் கொடுப்பனவுகளும்.

		ரூபா
2009.01.01 அன்றுள்ளவாறு திரட்டிய நிதி மீதி		**1,156,877,467.42**
பெறுகைகள்		
வட்டி வருமானம்		75,998,950.00
		1,232,876,417.42
கொடுப்பனவுகள்		
கடன் மீதி கொடுப்பனவுகள்		(42,368,565.43)
2009.12.31 அன்று மீதி – திறைசேரி முறிகள்	916,231,000.00	
வைப்புக் கணக்கு	274,276,852.00	**1,190, 507,851.99**

முன்னேற்றப் பாதை

2007 ஆம் ஆண்டின் பிற்பட்ட காலப்பகுதியிலிருந்து நவீனமயப்படுத்தப்பட்ட திறைசேறி தனிக் கணக்கு பின்பற்றப்பட்டதன் மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் நிதி முகாமைத்துவ முறைமையினை முன்னேற்றுவதற்கு முடியுமாக இருந்தது. இந்த திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் மூலம் அடையப்பட்ட சில நன்மைகள் பின்வருமாறு:

- செலவின முகவராண்மைகளினால் செயற்படுத்தப்பட்ட வங்கிக் கணக்கு மீதிகள் அனைத்தையும் தீர்ப்பனவு செய்வதன் மூலம் திறைசேரிப் பிரதி செயலாளரின் இரண்டு கணக்குகளிலும் மேலதிகப் பற்று மீதியினைக் குறைத்தல்,

- மேலதிகப் பற்று வசதிகளினூடாக கடன்பெறுகை மீதான வட்டிச் செலவினத்தினைக் குறைத்தல்,

- காசோலைகளைப் பெற்றுக்கொள்ள திறைசேரிக்கு வர வேண்டிய தேவை இன்மையால் செலவின முகவராண்மைகளினால் பிரயாணச் செலவினத்தைக் குறைத்தல்.

- செலவின முகவராண்மைகளின் வங்கிக் கணக்குகள் தொடர்பில் உடனடியான நிதி மாற்றலினை இயலுமாக்கியமை.

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமானது, அரசாங்க நிதி முகாமைத்துவத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு நிதி திட்டமிடல் அமைச்சினால் செயற்படுத்தப்படும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நிதி முகாமைத்துவ வினைத்திறன் கருத்திட்டத்தின் நன்மைபெறுநர்களில் ஒன்றாகும். இதனால், மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தினைச் செயற்படுத்துவதில் புதிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான திணைக்களச் செயன்முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை மிகவும் பயன்வலுமிக்கவகையில் அடைந்து கொள்வதற்கு: நிதி முகாமைத்துவ வினைத்திறன் கருத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படவிருக்கின்ற ஒருங்கிணைந்த திறைசேரி தகவல் முகாமைத்துவ முறைமையினைத் தாபித்தல் மற்றும் பிரயோகம் தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் கையாள்வதற்காக செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

Contents

		Page No
1.	*Vision*	2
2.	*Mission*	2
3.	*Introduction and Functions*	2
4.	*Cadre Information and Organizational Structure*	3 - 4
5.	*Human Resource Development*	5 - 7
6.	*Financial Performance*	8 - 9
7.	*Physical Performance*	10
7.1	*Cash Management*	10-17
7.2	*Government Borrowings*	17 - 18
7.3	*Public Debt*	18-20
7.4	*Continuous Review and monitoring of Cash Flow Position*	20
7.5	*Revenue Accounting*	21
7.6	*Recovery of Sub Loan Capital and Interest*	22
7.7	*Public Debt Servicing and Accounting*	22 - 24
7.8	*Contingent Liabilities on Guarantees and Letters of Comforts*	24-25
7.9	*Implementation and Monitoring of on-lending project under Foreign Aid Management Activities*	26-27
7.10	*Specially Assigned Functions*	27-30
	7.10.1 Operation of Revolving Fund for implementation of Paddy price stabilization scheme	
	7.10.2 Operation of Property Loan Guarantee Fund	
8.	*Way Forward*	30-31

1. Vision

"To be the best Government fund manager in the South Asia Region."

2. Mission

"We are committed to ensure efficiency, economy and safety in handling funds belonging to the Consolidated Fund and other Treasury funds and to harmonize the Government expenditure programmes with the revenue plans and borrowing programme, while providing stewardship for fund accounting, including foreign borrowings."

3. Introduction & Functions

The Department of Treasury Operations (TOD) was created on 28th July 2004 with the objective of creating an efficient organization within the Treasury to handle matters relating to Consolidated Fund Management including public debt accounting. In this endeavor, it has to translate estimated revenue and expenditure given in the National Budget into real cash inflow and outflow prepared on annual, monthly and daily basis and manage them effectively and efficiently in order to implement the National budget in achieving the goals and objectives of the government.

3.1 Major Functions

- Translate annual budget into operational cash flow and prepare budget execution plan
- Manage daily cash inflow and outflow of the government,
- Undertake market liquidity assessments to ensure stability in financial market & regular monitoring of money market conditions
- Develop appropriate borrowing instruments for the government.

3.2 Other Functions

- Act as the Coordinator and the Accounting Officer for twelve (12) miscellaneous Revenue Heads.
- Manage on-lending portfolio for the Government.
- Manage over twenty(20) on-going foreign aid related on-lending programmes.
- Manage contingent liability portfolio of the Government,
- Arrange Resources for Government Planned Debt Servicing
